# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலாஜி | மதம் | : இந்து |
| த/பெ | : ஆனந்த நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : நாசி நாயுடு கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**20.01.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி ராமமூர்த்திக்கு தனியாக வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.177/12 ஒரு வீடும், 177/12A ஒரு வீடும் வரும். தற்போது வாதி ராமமூர்த்தி குடியிருக்கும் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது வாதி குடியிருக்கும் வீடு வாதிக்கு எப்படி வந்தது என்றால் வசந்தியம்மாளின் தகப்பனாரிடமிருந்து வந்தது. அதில் வாதி வீடு கட்டினார். அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்பது தெரியுமா என்றால் செங்கம்ம நாயுடு பெயரில் உள்ளது. ராமமூர்த்தி நாயுடு வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. வழக்கு சொத்து வசந்தியம்மாளுக்குதான் சொந்தம் என்றால் வசந்தியம்மாளின் அப்பா ராமமூர்த்தி நாயுடுவிடமிருந்து வாங்கியுள்ளார். வழக்கு சொத்தின் வீட்டு வரி வசந்தியம்மாள் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மின் இணைப்பு வசந்தியம்மாள் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் நான்கு கடைகள் உள்ளது என்றால் ஆமாம். **(சாட்சி தற்போது பின்வருமாறு கூறுகிறார்)** வழக்கு சொத்தில் 2 கடைகள்தான் வரும். மீதி 1 கடை வசந்தியம்மாளின் அப்பா பொறுப்பில் இருந்தது. வழக்கு சொத்தில் குளியலறை,

கழிப்பறை, தென்னை மரம், 2 அசோக்கா மரங்கள் மற்றும் பலவித மரங்கள் உள்ளன என்றால் ஆமாம். தற்போது அந்த கடைகளை மணிகண்டன், டில்லிபாபு, கணேசன் ஆகியோர் நடத்தி வருகிறார்கள் என்றால் தற்போது கடைகள் மூடி உள்ளது. கடைகளை மணிகண்டன், டில்லிபாபு, கணேசன் ஆகியோர் நடத்தி வருகிறார்கள் என்றால் கணேசன் இறந்துவிட்டார். கடை சாவிகள் மணிகண்டனிடம் உள்ளது. டில்லிபாபுவிடம் அவரது கடை சாவிகள் உள்ளது என்றால் ஆமாம்.

3. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் மணிகண்டன் வழக்கு சொத்தில் கைபேசிக்கான கடை நடத்தி வருகிறார் என்றாலும் அதற்கு அருகில் பூ கடை உள்ளது என்றாலும் தற்போது வெளியூர்க்காரர்கள் கடையை எடுத்துள்ளார்கள். ஆனால் கடை திறக்கப்படவில்லை. பகுதி நேரமாக கடை திறந்து நடத்தி வருகிறார்கள் என்றால் உண்டு. மணிகண்டனும், பூக்கடைக்காரர்களும் வாடகையை வசந்தியம்மாளிடம் கொடுக்கிறார்கள் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. 2ம் பிரதிவாதி வசந்தியம்மாள் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அதில் வீடு கடைகள் கட்டி இன்றுவரை அனுபவித்து வருகிறார் என்றால் வசந்தியம்மாள் வீடு கட்டவில்லை. அவரது அப்பாதான் வீடு கட்டினார். அந்த வழக்கு சொத்தில் தகர சீட்டு போட்டு வசந்தியம்மாள்தான் வீடு கட்டினார் என்றால் அவர் தகர சீட்டு போட்டிருக்கலாம். வசந்தியம்மாள் அவ்வப்போது வந்து அந்த தகர சீட்டு வீட்டில் தங்குவார் என்றால் அவர் அப்பா, அம்மா வீட்டிற்கு வந்து தங்கி செல்வார். தற்போது வருவாரா என்பது தெரியாது.

4. வழக்கு சொத்தில் வாதி உட்பட வேறு யாரும் அனுபவத்தில் இல்லை என்றால் அனுபவத்தில் இல்லை. செங்கம்ம நாயுடுவிடம் நான் சீட்டு கட்டியிருந்தேனா என்றால் ஆமாம். செங்கம்ம நாயுடு பிரதிவாதிகளின் அப்பா என்றால் ஆமாம். செங்கம்ம நாயுடுவிடம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்தது என்றால் எனது சீட்டு பணத்தை அவர் எடுத்து கொண்டு இறுதியில் கொடுப்பதாக சொன்னார். இன்றுவரை அந்த பணம் வரவில்லை. இதற்கிடையில் அவர் இறந்துவிட்டார். எனது சீட்டு பணம் இதுவரை எனக்கு வராத கோபத்தில்தான் நான் ஆவணம் எழுதி கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வசந்தியம்மாளின் அப்பா பணம் பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்தார். நான் சொல்வதுபோல் ஆவணம் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை.

5. வழக்கு சொத்தில் செங்கம்ம நாயுடுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் வசந்தியம்மாள்தான் ஆக்கிரமிப்பு செய்து வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றாலும் இல்லை. வசந்தியம்மாள் தான் இன்றுவரை அனுபவத்தில் உள்ளார் என்றால் இல்லை. முழுவதுமாக செங்கம்ம நாயுடு அனுபவத்தில்தான் உள்ளது. வசந்தியம்மாள் திருமணமாகி திருப்பதி சென்றுவிட்டார். செங்கம்ம நாயுடுக்கு சிரஞ்சீவி என்ற மகனும் உள்ளார். இந்த வழக்கில் சிரஞ்சீவி தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். ஆனால் செங்கம்ம நாயுடுக்கு சிரஞ்சீவி என்ற மகனும் உள்ளார். வசந்தியம்மாள் தான் இன்றுவரை அனுபவத்தில் உள்ளார் என்றால் வசந்தியம்மாள் அவ்வப்போது வந்து செல்வார். செங்கம்ம நாயுடுவின் மகன் திருப்பதியில் உள்ளார். வசந்தியம்மாள் அப்பா சொத்து தனக்குதான் என்று கூறி வருகிறார்.

6. தற்போது சொத்தை ராமமூர்த்தி அனுபவிக்கவில்லை என்றாலும் வசந்தியம்மாள் அனுபவித்து வருகிறார் என்றாலும் மணிகண்டன் அந்த சொத்தில் உள்ளார். வாடகையை யாரிடம் கொடுக்கிறார் என்று தெரியாது. வழக்கு சொத்து செங்கம்ம நாயுடுக்கு சொந்தமானது இல்லை என்றாலும் வசந்திதான் ஆக்கிரமித்து வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றாலும் வசந்திதான் வாடகையை வாங்கி வருகிறார் என்றாலும் நான் சொல்லும் ஆவணத்தை நாங்களாக தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. சீட்டு தகராறுக்காக நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)